**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.5** |
| **Name** | **:** | **திரு.உமேஷ்** |
| **Father's Name** | **:** | **ஏகாம்பரம்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28-6-2023.**

**முதல் விசாரணை -**

**நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் மார்க்கெட்டிங் செய்து வருகிறேன். இறந்துபோன சுரேஷ் தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. 1ஆம் மாதம் 2018ஆம் வருடம் தேதி ஞாபகம் இல்லை. இரவு 10.30, 11 மணியிருக்கும். நான் என்னுடைய வீட்டிடம் வெளியில் படுத்துக்கொண்டு இருந்தேன். சுரேஷின் அம்மா சுசீலா அழுதுக்கொண்டு வந்து என்னை வந்து எழுப்பினார்.**

**நான், சிவக்குமார் ஆகியோர் இருசக்கர வாகனத்திலும் எங்களுக்கு**

முன்னால் விஜயமணி, சுசீலா, வடிவேல் ஆகியோர் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் போவதற்கு முன்பே சுரேசிற்கு 108 ஆம்புலன்சில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. சுரேஷ் உட்கார்ந்த நிலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும்போதே வடிவேலை கூப்பிட்டார். உடனே 108 ஆம்புலன்சில் இருந்தவர்கள் சுரேசை படுக்க வைத்து வடிவேலையும், விஜயமணியையும் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள்.

நாங்கள் போகும்போது சுரேசிற்கு தலையில் கட்டு கட்டிக்கொண்டிருந்தார்கள். பிறகு தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். எதனால் கட்டு கட்டினார்கள் என்றால் அடிப்பட்டதால் கட்டு கட்டினார்கள். எப்படி அடிப்பட்டது என்றால் அப்போது எனக்கு தெரியாது. பின்னால் கேட்டு தெரிந்துக்கொண்டேன்.

சுசீலா என்ன சொல்லி கூப்பிட்டார் என்றால் சுரேசிற்கு அடிப்பட்டுவிட்டது என்று சொல்லி கூப்பிட்டார். எப்படி அடிப்பட்டது என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நான் போகும்போது என்ன ஆனது என்று சொல்லி சுசீலா அழுதார்கள்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை</u>

எதிரிகளுக்கும் சுரேசிற்கும் ஏற்கனவே முன்விரோதம் உண்டா என்றால் அவர்களுக்குள் ஒரு பிரச்சனை இருந்தது. சுரேசிற்கும் எதிரிகளுக்கும் பொது இடம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. பொது இடத்தை

ஆக்ரமிப்பு செய்ததாக நாகப்பன் மீது மணிகிருஷ்ணன், மோகனவேல், முருகேசன் ஆகியோர் வழக்கு போட்டுள்ளார்கள். வழக்கிற்கு பிறகு இருதரப்பிலும் சண்டை வரும் என்றால் அப்படி எல்லாம் வராது. நான் வெளியில் 9.30 மணிக்கு படுத்திருந்தேன். வேலைக்கு சென்று 8 மணிக்கெல்லாம் வந்துவிடுவேன்.

இறந்துபோன சுரேஷ் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையில் எத்தனை வீடு உள்ளது என்றால் நான்கு வீடுகள் உள்ளது. 8 மணிக்கு நான் வீட்டிற்கு வரும்போது சண்டை போடும் சத்தம் கேட்டதா என்றால் கேட்கவில்லை. சுசீலா 8 மணி அளவில் எதிரிகள் தகராறு செய்வது சம்பந்தமாக என்னையும் மற்ற நபர்களையும் அழைத்தாரா என்றால் அழைக்கவில்லை. 108 நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் நான் போகவில்லை.

என்னை போலிசார் விசாரித்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் அனைவரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதாலும், ஊர்க்காரர்கள் என்பதாலும் அவர்களை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் நான் தான் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்தேன் என்றும் அவ்வாறு போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

சுசீலா என்னிடம் தன் மகன் அடிப்பட்டதை தகவல் கேட்டு தான் வந்து எங்களிடம் சொன்னார் என்றால் சரி தான். மலையாங்குளத்தை சேர்ந்த ஒரு நபர் சிப்காட்டில் இருந்து வேலை முடித்து வந்து தகவல் சொல்லி சுசீலாவிற்கு

தெரிய வந்தது என்றால் சரி தான். பிரச்சனைக்காக போடப்பட்ட வழக்குகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி தான். நானும் சுசீலா அம்மாளும் இரு இருசக்கர வாகனத்தில் ஒன்றன்பின் ஒன்றாக தான் அடிப்பட்ட இடத்திற்கு சென்றோம் என்றால்ன சரி தான்.

7 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.